மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

ஆசாரக் கோவையில் காணும் வாழ்வியல் கூறுகள்

Asarak Kovaiyil Kaanum Vaazhviyal Koorukal

பரமேஸ்வரி முத்துச்சாமி/ Parameswari Muthusamy[1]
[1]Teacher, Smk Canossion Convent, Kluang, Malaysia
Corresponding Email: mesvijay2215@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்களைச் சேர்த்துப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. அதில் ஆசாரக் கோவை எனும் நூலும் அடங்கும். இந்நூலை இயற்றியவர் கயத்தூர் பெருவாயின் முன்னியார். அடிப்படை ஒழுக்கங்களைத் தவிர நாள்தோறும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை இவை, தவிர்க்க வேண்டியவை இவை என்பதையும் இந்நூல் தெளிவாகக் கூறுகின்றது. இவ்வாய்வானது பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலக ஆய்விற்கு ஏற்ற நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முழுமையாக நூலக ஆய்வு அணுகுமுறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேவைக்கான தரவுகளை முதலில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளின் வழி சேகரிக்கப்பட்டது. மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் சரிந்து கொண்டிருக்கும் இன்றைய இந்தியச் சமுதாயத்தை மீட்டுக் கொண்டுவர ஆசாரக் கோவையின் பாடல்கள் பெரிதும் உதவும் என்று இந்த ஆய்வின் வழி அறியப்படுகிறது.

கருச்சொற்கள்: ஆசாரக் கோவை, வாழ்வியல் கூறுகள்

Abstract

18 texts composed during Sangam Maruviya period are given as eighteen texts. It also includes the book Asarak Kovai. The author of this book was the predecessor of Gayathur Peruvai. Apart from the basic morals, this book also clearly states that these are the things that should be followed in daily life and these are the things that should be avoided. This study has been carried out in qualitative approach. All the data for this review were collected using bibliographic research approach. This research has been carried out in a descriptive approach using books, research articles etc. suitable for this library study. As this research has been carried out entirely through bibliographic approach, the required data was first collected through books and research articles. Through this study it is known that the songs of Asarak Kovai will help greatly in bringing back the present-day Indian society where human qualities and moral values are declining.

Keywords: Asarak Kovai, Elements of Life

முன்னுரை

சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட 18 நூல்களைச் சேர்த்துப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கப்படுகின்றன. ஒவ்வொன்றும் தனித் தனியாக வெவ்வேறு புலவர்களால் பாடப்பட்டவை. இத்தொகுதியில் அடங்கியுள்ள நூல்கள் பெரும்பாலும் நீதிநூல்கள். அவ்வகையில் ஆசாரக்கோவையில் எனும் நூலானது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசாரங்களை எடுத்துக் கூறும் நூல் ஆகும். ஆசாரம் என்பது வடசொல். தமிழில் நெறி, முறை, வழி என்று பொருட்படும். ஆசாரக் கோவை என்பதற்கு ஒழுக்கங்களின் தொகுதி என்று பொருள் கூறப்படுகிறது. ஆசாரக் கோவை ஒரு பொதுச் சுகாதார நூல் என்றே சொல்லலாம். எல்லா மக்களும் நோயற்ற வாழ்வு வாழ்வது எப்படி? என்பதை முழுமையாக உரைக்கின்றது.

ஆசிரியர்

இந்நூலை இயற்றியவர் கயத்தூர் பெருவாயின் முன்னியார். முன்னியார் என்பது இவரது இயற்பெயர். வண்கயத்தூர் என்பது இவரது ஊர்ப் பெயர். இந்நூல் பாயிரம் நீங்கலாக நூறு வெண்பாக்களைக் கொண்டது. குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா, நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பாவின் வகைகள் யாவும் இந்த நூலில் காணப்படுகின்றன. பல்வேறு வெண்பா வகைகளால் அமைந்த 100 பாடல்களால் ஆனது இந்நூல். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விடயம் தொடர்பான ஒழுக்கத்தை எடுத்து இயம்புகின்றது.

நூலின் சிறப்பு

அடிப்படை ஒழுக்கங்களைத் தவிர நாள்தோறும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை இவை, தவிர்க்க வேண்டியவை இவை என்பதையும் இந்நூல் தெளிவாகக் கூறுகின்றது. பேரறிஞர்கள் தம் அனுபவத்தில் ஆராய்ந்து சொன்ன ஒழுக்க நெறிகள் இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது தெரிய வருகிறது. ஒரு சராசரி மனிதன் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய மிகவும் எளிமையான வழக்கங்கள் எளிமையாகக் கூறப்பட்டுள்ளன. ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்’ எனும் பழமொழிக்கேற்ப இளம்பருவம் முதல் நல்ல பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டால் பின்னர் நற்பண்புகள் உருவாக வழிவகுக்கும் என்ற கருத்தின் அடிப்படையில் இந்நூல் அமைந்துள்ளது. இன்னின்ன செய்யத் தக்கவை, இதனால் இன்ன நலம் உண்டாகும் என்பதும் இன்னின்ன செய்யத் தகாதன, அவற்றைச் செய்யின் இன்னின்ன கேடுகள் உண்டாகும் என்பதும் இந்நூலில் தெளிவாக விளக்கப்படுகின்றன.

தமிழன் பல நூற்றாண்டு முன்னரே அறிவியல், வாழ்க்கை நெறிமுறை, ஆரோக்கியமாக வாழும் வழிகள் கண்டு அறிந்திருந்தான் என்பதற்கு இந்த நூல் ஒரு சிறந்த சான்றாகும். ஆசாரக் கோவை அக்காலக் கட்டத்தில் வாழ்ந்த தமிழர்களின் தினசரி வாழ்க்கை நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

தமிழர் வாழ்வில் இன்றியமையாத விடயங்களாகக் கருதுவது,

(1) ஒழுக்கம்
(2) காதல்
(3) வீரம்

ஆகிய மூன்றும்தான். பண்டைய தமிழ்ச் சங்க இலக்கியங்களில் இந்த மூன்று விடயங்களைப் பற்றித்தான் அதிகப் பாடல்கள் உள்ளன. ஆனால், இந்த ஆசாரக் கோவை குறிப்பாக ஒழுக்கத்தைக் குறித்துப் பேசுகின்றது.

பாடல் விளக்கம்

ஆசாரக் கோவையின் ஒவ்வொரு பாடலும் மிகவும் எளிமையாகவும் கருத்துகள் பொதிந்தும் கிடக்கின்றன. எனினும், என் ஆய்வுக்குச் சில பாடல்களைத் தேர்வு செய்துள்ளேன். அவற்றின் சிறப்புகளைக் காண்போம்.

ஒரு மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் நெறியுடன் வாழ்கிறான் என்பதற்கு அடிப்படையான 8 கூறுகளை முதன்மையாக வைத்து முதல் பாடல் இயற்றப்பட்டுள்ளது.

ஆசார வித்து (பஃறொடை வெண்பா) --1
நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் இவைஎட்டும்
சொல்லிய ஆசார வித்து

வாழ்க்கையின் ஆசாரங்களை 8 கூறுகளாகக் கூறுகிறார் ஆசிரியர். அவையாவன, நன்றியறிதல், பொறுமை, இன்சொல், கொடுமை செய்யாமை, கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை, பெரியாரொடு உறவாடுவது, எனும் 8 விடயங்கள் ஆகும். ஒவ்வொருவரும் வாழ்வில் இவற்றைக் கடைப்பிடித்தோம் என்றால் வாழ்க்கை செழிப்பாக இருக்கும்.

ஒழுக்கம்

ஒழுக்கம் மனிதனையும் மிருகத்தையும் வேறுபடுத்திக் காட்டும் ஒரு கருவியாகும். எனவே, ஒழுக்கத்தில் நிலை பெற்றவர் ஒருவர் அடையும் நன்மைகள் இன்னின்ன எனக் கூறும் வகையில் இரண்டாவது பாடல் அமைகிறது.

ஒழுக்கம் தவறாதவர் அடையும் நன்மைகள் (இன்னிசை வெண்பா) ---2

பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோ யின்மை
இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்
ஒழக்கம் பிழையா தவர்

பிறப்பு, நெடுநாள் உயிர்வாழ்வு, பொருள் வளங்கள், பொலிவான தோற்றம், நிலவுடைமை, செல்வாக்கு, செயல் திறமை பகுத்துணரும் கல்வித்திறம், நோய் இல்லா உடலும் உள்ளமும். இவை எட்டையும் வாழ்விற்கு அவசியாமனவை என்பதை விளக்குகிறார். மனிதன் வாழ்க்கையை இம்மையில் நெறியுடன் வாழ்ந்து, வீடுபேற்றை அடைவதே இவ்வாழ்வின் குறிக்கோள். அதற்கு ஒரு மனிதனுக்குத் தேவையானவற்றைப் பெற்று வாழ்வதே சிறப்பு.

காலையில் துயில் எழுவதன் அவசியம்

முந்தையோர் கண்ட நெறி (இன்னிசை வெண்பா) --4

வைகறை யாமம் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை

ஒவ்வொரு நாளும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய செயல் திறன், விடியற்காலை எழுந்து விட வேண்டும் என்பது முதற்செயல். நம்மில் எத்தனை பேர் இதனைக் கடைப்பிடிக்கிறோம். பின் அன்று செய்ய வேண்டிய நெறியான கடமைகளையும் நேர்மையாகப் பொருள் தேட வேண்டிய முறைகளையும் நன்கு சிந்திக்க வேண்டும். பிறகு இவற்றைச் செய்யத் தொடங்கும் முன் தவறாமல் தக்க மரியாதையோடு தாய்தந்தை வணங்கி ஆசி பெற்றுத் தொடங்க வேண்டும். இவை ஒழுக்கம் அறிந்த முன்னோர் சொன்ன நெறியாகும். எனவே, நாம் தினந்தோறும் கடைப்பிடிக்க வேண்டிய மரியாதையான செயல்கள் செய்வதன் வழி வெற்றியினை மட்டுமே சந்திக்க உதவும்.

தெய்வத்தை வணங்கும் முறை

காலையில் கடவுளை வணங்குக (இன்னிசைச் சிந்தியல் வெண்பா)

நாளந்தி கோல்தின்று கண்கழீஇத் தெய்வத்தைத் -- 9
தானறியும் ஆற்றால் தொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி

காலை எழுந்தவுடன் பல் குச்சி முதற்கொண்டு பற்களைச் சுத்தம் செய்து கண் முதலிய முக உறுப்புகளை முறைப்படி கழுவிப் பின் தமிழ் மரபுப்படி தமக்குப் பழக்கமான முறையில் தெய்வத்தைத் தொழுது பிறகே மற்றவற்றைச் செய்ய முனைய வேண்டும். மேலும், வேலை நிமித்தமாகக் காலையில் தெய்வத்தை நிரல்படி வணங்கிச் சென்றாலும், மாலை நேரம்

தெய்வச் சன்னிதானத்திற்குச் சென்று முறை தவறாமல், விழுந்து வணங்கிப் பணியாமையும் குற்றமாகும் என்று கூறுகிறது ஆசாரக்கோவை.

சுத்தம்

வாய் அலம்பக் கூடாத இடங்கள் (இன்னிசை வெண்பா) --35
நடைவரவு நீரகத்து நின்றுவாய் பூசார்
வழிநிலை நீருள்ளும் பூசார் மனத்தால்
வரைந்துகொண் டல்லது பூசார் கலத்தினால்
பெய்பூச்சுச் சீரா தெனின்

ஆறு, வாய்க்கால்தானே என்று எண்ணி அவை இடை நின்றும், நிறைய நீர் இருக்கும் ஏரி, குலம்தானே என நினைத்து அவைக்குள் நின்றும் கைகால் கழுவல், வாய்கொப்பளித்தல் முதலியன செய்யக்கூடாது. ஒரு பாத்திரத்தில் நீரை எடுத்து வந்து கரையிலேயே சுத்தம் செய்து கொள்ள வேண்டும். இப்பாடல் நீரினைச் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பண்பினை எடுத்துக் கூறுகிறது. ஆறு நமக்கு குடிநீராகவும் பயன்படுவதால், நோய்நொடி வராமல் இருக்க ஆற்று நீரையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நன்று.

புறப்பட்டுப் போகும் ஒருவரை அழைக்கக் கூடாது

ஒருவர் புறப்படும்போது செய்யத் தகாதவை (இன்னிசை வெண்பா) –59
எழுச்சிக்கண் பிற்கூவார் தும்மார் வழுக்கியும்
எங்குற்றுச் சேறீரோ என்னாரே முன்புக்கு
எதிர்முகமா நின்றும் உரையார் இருசார்வும்
கொள்வர் குரவர் வலம்

புறப்பட்டுப் போகும் ஒருவரை - பின்னால் இருந்து கூப்பிடக் கூடாது. (கிளம்புங்கால்) தும்மலைச் செய்தல் கூடாது; “நீ எங்குப் போகப் போகிறீர் “என்ற கேள்வியைத் தவறியும் கேட்டல் தவறாகும். அவர் முன் போய் எதிர் மறித்து நின்று பேசக்கூடாது; சொல்ல வேண்டியன இருந்தால் அவருக்கு வலமாக அல்லது இடமாகப் பக்கத்தில் தொடர்ந்து நடந்தபடி செல்லல் வேண்டும். பயணம் போவோர் பெற்றோர், பெரியோர்களானால் அவர்களுக்கு இடக்கை புறமே தொடர்ந்தபடி செல்லல், சொல்ல வேண்டும். இவை போன்ற வாழ்வியல் கூறுகள் படிப்பதற்கு மிகவும் சாதாரணமாக இருந்தாலும், இன்றைய இளையோருக்கு அவசியமான ஒன்றாக இருக்கிறது. மனிதநேயம் திசைமாறிச் சென்றுகொண்டிருக்கும் நிலமை யாவரும் அறிந்ததே!

மனத்திடம்

பெரியோரிடம் உள்ள முச்செயல்கள் (நேரிசை வெண்பா) --79
துன்பத்துள் துன்புற்று வாழ்தலும் இன்பத்துள்
இன்ப வகையால் ஒழுகலும் - அன்பின்
செறப்பட்டார் இல்லம் புகாமையும் மூன்றும்
திறப்பட்டார் கண்ணே உள

வாழ்க்கையில் துன்பங்கள் நிறையும்போது அவற்றைத் தாங்கி நிலை குலையாமல் வாழ்வதும், இன்பங்கள் கூடும்போது வரம்போடு அனுபவித்து, பண்பு ஒழுக்கம் குலையாமல் வாழ்வதும், அன்பை அறவே துடைத்து ஒதுக்கி விட்டு வாழ்பவர் வீட்டுக்குள் நுழையாமல் வாழ்வதும் ஆகிய திடமான நெறி வாழ்க்கை உறுதியான மனம் படைத்த ஆண் - பெண்களிடமே நிலைத்திருக்கும் காலை எழுதந்தவுடன் பல கோணங்களில் உருவெடுக்கும் சிக்கல்களை எதிர் நோக்கும் இக்காலக் கட்டத்தில் இது போன்ற கருத்துள்ள பாடல் மிகவும் அவசியமானது அல்லவா?

காக்க வேண்டியவை

பொன்னைப் போலக் காக்கத் தக்கவை (இன்னிசை வெண்பா) --95
தன்னுடம்பு தாரம் அடைக்கலம் தன்னுயிர்க்குஎன்று
உன்னித்து வைத்த பொருளோ டிவைநான்கும்
பொன்னினைப் போல்போற்றிக் காத்துய்க்க உய்க்காக்கால்
மன்னிய ஏதம் தரும்

மனிதக் குலம் தவறாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நான்கு முக்கிய விஷயங்களை எடுத்துக் காட்டி அவற்றைப் பொன்னைப் போலக் காப்பது மூலம் உங்களைக் காத்துக் கொள்ளலாம். காப்பதில் தவறினால் அளவற்ற சங்கடங்கள் உண்டாகும் எனப் பொறித்த இந்தப் பொன் எழுத்துச் சூத்திரத்தைப் பொன்னைப் போலக் காப்பாற்ற வேண்டும். அவையாவன, ஒருவனது உடம்பும் நலமும், தன் மனைவியும் நலமும், தன்னால் காப்பாற்றப்பட வேண்டிய கடமை, தனது வாழ்நாளில் பல தேவைகளுக்கு வேண்டுமென்று சேர்த்து வைத்து வரும் செல்வம். இன்று குடும்பம், உறவு, நட்பு எனப் பல உறவுகள் நம்மைச் சுற்றி இருக்கின்றன. அவற்றுள் மிக முக்கியமானது குடும்பம். அவ்வகையில் குடும்பம் எனும் கூடு முறையாகப் பாதுகாக்கப் படாததால் பல சிக்கல்கள் ஏற்பட்டு, பல விவாகரத்துகளும் அதன் விளைவாகக் குழந்தைகள் பராமறிக்கப் படாமல் விடப்படுகின்றனர்.

பறவை, பூச்சியிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டியவை

எறும்பு முதலியவை போல் செயல் செய்தல் (இன்னிசை வெண்பா) ---96
நந்தெறும்பு தூக்கணம் புள்காக்கை என்றிவைபோல்
தம்கருமம் நல்ல கடைப்பிடித்துத் தங்கருமம்
அப்பெற்றி யாக முயல்பவர்க்கு ஆசாரம்
எப்பெற்றி யானும் படும்

தேவைக்கெனப் பொருள்களைப் பருவக் காலத்தில் சேர்த்து வைப்பதில் எறும்பு போலவும் பாதுகாப்பான வீடு அமைப்பதில் தூக்கனாங்குருவி போலவும் அன்றாடம் குளித்தல், அறியாத சேர்க்கை, விருந்தோடு உண்னல், சாமர்த்தியம், ஜாக்கிரதை இவற்றில் காக்கை போலவும் தம் செயல்களைத் தரும நெறி வழுவாது கடைப்பிடித்து நடப்பவர்க்கு ஆசாரம் எல்லா வகையிலும் சிறக்கும்.

நிறைவுரை

மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் சரிந்து கொண்டிருக்கும் இன்றைய இந்தியச் சமுதாயத்தை மீட்டுக் கொண்டுவர ஆசாரக் கோவையின் பாடல்கள் பெரிதும் உதவும் என்று இந்த ஆய்வின் வழி அறியப்படுகிறது. காலத்திற்கு ஒவ்வாதவை மூடநம்பிக்கை என்று புறக்கணிக்கப்பட்ட தொன்மையான அறிவுரைகள் இந்நூலில் புதைந்து கிடப்பதை அறிகிறோம். அரும்பெரும் வாழ்வியல் கூறுகளை விட்டுவிட்டு இன்று பொறையோடிப்போன சமுதாயமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். பழமையான பாக்கள் கற்பதற்குக் கடினம், வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்குச் சிரமம் என்று பழமையான வைரம்போன்ற இலக்கியத்தை அலட்சியப்படுத்தி வருகிறோம்.

எனவே, ஆசாரக் கோவையின் பாடல்கள் இளம்பருவம் முதலே இளையோரைச் சென்றடைய வேண்டும். இந்தச் சமுதாயத்தை நெறிப்படுத்த மேம்பாடடையச் செய்ய ஆசாரக் கோவை போன்ற தமிழ் இலக்கியம் பங்கு இன்றியமையாததாக உள்ளது. மனித வாழ்க்கைக்கு அவசியமான வாழ்வியல் கூறுகளை ஆசாரக்கோவையின் வழி அடுத்த தலைமுறையினரைக் காப்பாற்றுவோம்.

துணைநூற்பட்டியல்

கலியாணராமன் தி.சு. (2007). ஆசாரக்கோவை (தெளிவுரை,கருத்துரை,விளக்கம் . சென்னை : செந்தமிழ் பதிப்பகம்

சீனி நைனா முகம்மது.செ (2007). தமிழ்ச்செம்மொழி சிறப்பு மலர் .பினாங்கு : உலகத் தமிழர் பதிப்பகம்

சுப்ரமனியன் ச.வே (2007).பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் .சென்னை : மெய்யப்பன் பதிப்பகம்

மலேசியத் தமிழாய்வு மன்றம் & தமிழ்ப் பிரிவு , சுலுத்தான் இதுரீசு கல்வியியல் பல்கலைக்கழகம். (2016). தமிழ்க்கல்வி ஆய்விதழ். கோலாலும்பூர்: உமா பதிப்பகம்.